## “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ்

# ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.7,500 ஊக்கத் தொகை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, ஆக.6-

கல்லூரி மாணவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் “நான் முதல்வன்” திட்டம், போட்டித் தேர்வு மாணவர்களுக்கு உதவும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னெடுப்பைச் செய்துள்ளது.

குடிமைப்பணி தேர்வுகளுக்குத் தயாராகும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உதவும் நோக்கில், 2023-24-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டுத் தேர்வின் வாயிலாகத் தேர்வு செய்யப்படும் 1,000 மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.7,500 வழங்குவதற்கான சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், முதல்நிலைத் தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குத் தயாராவதற்காக ரூ.25,000 ஊக்கத்தொகையும் வழங்கப்படும். போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதோடு அவர்களது செலவுகளைக் குறைக்கும் நோக்கத்தோடும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஐ.ஏ.எஸ். ஆர்வலர்களுக்கான இந்த மாதாந்திர ஊக்கத்தொகைத் திட்டமானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்படும். கடந்த சில ஆண்டுகளாக, ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறும் தமிழ்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவருவதைக் கருத்தில் கொண்டு அகில இந்திய போட்டித் தேர்வுகளில் மீண்டும் தமிழ்நாட்டை முன்னிலைக்குக் கொண்டுவருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியும் பாடக்குறிப்புகளும் கிடைப்பதை இத்திட்டம் உறுதிசெய்ய முனைந்துள்ளது.

மதிப்பீட்டுத் தேர்வை எழுத ஏதேனும் ஒரு இளங்கலைப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்ச வயது 21. பொதுப் பிரிவினருக்கான அதிகபட்ச வயது 32. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும் சீர்மரபினருக்கும் அதிகபட்ச வயது 35, பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் அதிகபட்ச வயது 37, மாற்றுத்திறனாளிகள் 42 வயதைக் கடந்திருக்கக் கூடாது. ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான வயது வரம்பின் அடிப்படையில் மதிப்பீட்டுத் தேர்வுக்கான வயது வரம்புநிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுத் தேர்வின் வாயிலாக தேர்வுசெய்யப்பட உள்ள 1,000 மாணவர்களில் 21-22 வயது கொண்ட புதிய ஆர்வலர்கள் 50 பேருக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். பட்டப்படிப்பின் போதே, போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு மிகப்பெரிய பயனளிக்கும். மருத்துவம், கால்நடை அறிவியல் மற்றும் ஒருங்கிணைந்த பட்டப்படிப்பு மாணவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும். என்றாலும், அதுகுறித்து திறன் மேம்பாட்டுக் கழகமே முடிவு செய்யும். மதிப்பீட்டுத் தேர்வுக்கு https://nmcep.tndge.org/apply_now என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கக் கடைசி நாள், 17.08.2023.

10.09.2023 அன்று முற்பகல் தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் மதிப்பீட்டுத் தேர்வு நடைபெறவுள்ளது. சரியான விடைகளைத் தேர்வு செய்யும் வகையில் 150 கேள்விகளைக் கொண்டதாக இத்தேர்வு அமையும். 100 கேள்விகள் பொது அறிவு பிரிவிலிருந்தும் 50 கேள்விகள் சிசாட் எனப்படும் குடிமைப் பணித் தேர்வுகளுக்கான திறனறிவு பிரிவிலிருந்தும் கேட்கப்படும். தவறான கேள்விகளுக்கு எதிர்மறை மதிப்பெண்கள் கிடையாது. வினாத்தாள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும். தேர்வுக்கான கால அளவு, 3 மணி நேரம்.

இத்தேர்வில் முதலிடம் பிடிக்கும் 1,000 மாணவர்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்படும். இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி இந்தப் பட்டியல் தயாரிக்கப்படும். இந்த மதிப்பெண் பட்டியலிலிருந்து சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் இயங்கிவரும் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சித் தேர்வு மையம், கோயம்புத்தூரிலும் மதுரையிலும் இயங்கிவரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணி பயிற்சி நிலையங்களுக்கும் சேர்க்கை நடைபெறும். சென்னை பயிற்சி மையத்தில் 225 மாணவர்களுக்கு உண்டு உறைவிட வசதியுடன் முழுநேரப் பயிற்சியும் 100 மாணவர்களுக்குப் பகுதிநேரப் பயிற்சியும் அளிக்கப்பட்டுவருகிறது. கோயம்புத்தூர், மதுரை பயிற்சி நிலையங்களில் தலா 100 மாணவர்களுக்கு முழுநேரப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தை நடத்தி வரும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, டி.என்.பி.எஸ்.சி., எஸ்.எஸ்.சி., சீருடைப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கும் உதவும் வகையில் இணையம் வழியாகப் பயிற்சியளித்து வருவது குறிப்பிடத்தக்கது. AIM TN என்ற யூடியூப் தளத்தில் இந்தப் பயிற்சிக் காணொளிகள் பார்க்கக் கிடைக்கின்றன.

இது தவிர வங்கித் துறை, ரயில்வே துறை, எஸ்.எஸ்.சி. உள்ளிட்ட ஒன்றிய அரசின் மற்ற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு உதவும் வகையில் கட்டணமில்லாப் பயிற்சித் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 5000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கட்டணமில்லா பயிற்சி, பாடநூல்கள், வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐ.ஏ.எஸ். தேர்வுகளுக்கு ஊக்கத்தொகையுடன் பயிற்சி, எஸ்.எஸ்.சி. தேர்வுகளுக்கு இதற்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் சிறப்புக் கவனம், ஊரக மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் வல்லுநர்களின் காணொளி வகுப்புகள் என்று போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கு ஏற்ற ஒரு சூழலைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அரசுப் பணிகளின் வாயிலாக நாடு முழுவதும் தமிழ்நாட்டின் முத்திரையைப் பதிக்க கல்லூரி மாணவர்கள் தயாராக வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ள இடத்தையும், அங்கு நடைபெற்று வரும் மேடை அமைக்கும் பணியையும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், ஐ.பெரியசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., மற்றும் கழக முன்னோடிகள் அப்போது உடனிருந்தனர்.

# திருப்பத்தூர் - காரைக்குடியில் பாகமுகவர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! மு.தென்னவன் சிறப்புரை!

சிவகங்கை, ஆக, 6-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் திருப்பத்தூர் சிந்தாமணி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சண்முக வடிவேலு, விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், பூமணி, கே.பாலசுப்பிரமணியன், எஸ்.செல்வராஜ் ஆகியோர் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள், கரு.அசோகன், பள்ளத்தூர் கே.எஸ். ரவி, பேரூராட்சி மன்ற தலைவர்கள் அம்பலமுத்து, திருமதி கோகிலராணி நாராயணன், துணை தலைவர்கள் செந்தில், கான்முகமது, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, மற்றும் நிர்வாகிகள் சிவபுரி சேகர், ராம. ரவி, குடோன்மணி, பாஸ்கரன், மனோகரன், காளிமுத்து, சோமசுந்தரம், ஷாஜகான்,ஏ.எல்.சந்திரன், வி.பி.ஜெகன்னாதன், ஒன்றிய பொருளாளர் ஏ.எம். கண்ணன் பிள்ளையார்பட்டி வெள்ளைச்சாமி, புதூர் கண்ணன் ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், பிளாசாசேகர், சன்சீமான்சுப்பையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் அபூர்வ மகாலில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், காரைக்குடி நகரமன்ற தலைவருமான எஸ்.முத்துதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. காரைக்குடி நகர செயலாளர் என். குணசேகரன் வரவேற்றுப் பேசினார். இந்த கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னதுரை, கே. ஆர்.ஆனந்த், நாகனி ரவி, பூபால சிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன், தேவகோட்டை நகரச் செயலாளர் பெரி.பாலா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் சுப.துரைராசு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி.செந்தில்குமார், துரை. நாகராஜ், சொ.கண்ணன், சேவியர், சண்முகம், இலக்கிய அணி அழகையா, இளங்கோ அன்பு, பேரூர் கழக செயலாளர்கள் பகுருதீன், பிரம்மையா, அசோக் உட்பட பாகமுகவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வருகிற 17 ஆம் தேதி ராமநாதபுரத்தில் கழக தலைவரும், முதல்வருமான தளபதி அவர்கள் கலந்து கொள்ளும் தென்மண்டல பாக முகவர்கள் கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த பாகமுகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் 2024ல் நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலில் பாகமுகவர்களின் தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார்கள்.


